**MCOP No.122/2019**

**தேதி- 25.08.2022**

**ம.சா.1**

**பெயர்: திரு. சபரிநாதன்**

**2-வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

விபத்து காலத்தில் இருசக்கர வாகனமான TN 02 R 8400 என்பதை நான் ஓட்டிச் சென்றேனா அல்லது என் நண்பன் சரவணன் என்பவர் ஓட்டிச் சென்றாரா என்றால் நான் தான் ஓட்டிச் சென்றேன். மேற்படி இரு சக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என் நண்பர் தினேஷ்குமார் என்பவருக்குச் சொந்தமானது. விபத்து காலத்தில் அந்த வாகனத்திற்கு எந்த காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

இரு சக்கர வாகனம் கீர் வண்டி வகையைச் சார்ந்தது என்றால் சரிதான். கீர் வகைகையச் சார்ந்த இரு சக்கர வாகத்தை ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்த தேதி, 23.08.2018. நேரம் மாலை 6.00 மணி. விபத்து வாகனம் சேவூரிலிருந்து சிறுமூர் கிராமம் நோக்கி வந்தது. விபத்து நேரத்தில் டிராக்டர் வாகனம் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்தார்களா என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

நான் அடிப்பட்டவுடன் முதன்முதலில் ஆரணி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்பு மருத்துவரின் ஆலோசனையின் படி வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் எவ்வளவு நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் 18 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன்.

விபத்து நடந்த காலத்தில் எனக்கு என்ன வயது, என்ன தொழில், என்ன வருமானம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தச்சு வேலை செய்கிறேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. நான் மாதம்

ரூ.20,000/- சம்பாதிக்கிறேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழில்வரி மற்றும் வருமான வரி செலுத்துவதில்லை.

விபத்து சமயத்தில் விபத்துக்குச் சம்மந்தப்பட்ட டிராக்டர் வாகனத்திற்கு 2-வது எதிர்மனுதாரரிடம் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. டிராக்டர் வாகனத்திற்கு 2வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை காப்பீடு உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. டிராக்டர் வாகனத்திற்குண்டான காப்பீடு எந்த நேரத்திலிருந்து ஆரம்பிக்கிறது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2-வது எதிர்மனுதாரர் இந்த மனுவில் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. 2-வது எதிர்மனுதாரரிடம் டிராக்டர் வாகனம் காப்பீடு செய்யப்படாததால் இம்மனு 2-வது எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ K.Vijaya
Additional District Judge,
Fast Track Court, Arani.